சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 27 ம் நாள் வியாழக்கிழமை

**இந்து திருமண முதலேற்பு மனு எண். 23/2023**
*(CNR No.TNTH050001302023)*

அருண் .... **மனுதாரர்**

**/எதிர்/**

நீனு .... **எதிர்மனுதாரர்**

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 23.07.2026 ம் தேதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.பிரகாஷ், B.A.B.L., அவர்கள் ஆஜராகியும், ஆரம்பத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. Y.ரஹீம் ராஜா அவர்கள் ஆஜராகியும், அதன்பின்னிட்டு எதிர்மனுதாரர் திருமதி.நினு, வழக்கறிஞர் என்பதால் நீதிமன்றத்தில் ஆஜராகி (party in person) ஆக தனது வழக்கை தானே முன்னின்று நடத்தியும் இரு தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான:-

**ஆணையுரை**

இம்மனுவானது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 28.10.2012 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, இந்து திருமணச் சட்டம் 13(1)(i–a) பிரிவுகளின் கீழ் விவாகரத்து பரிகாரம் வழங்கக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரரின் மனுவின் சுருக்கம்:**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இந்து சம்பிரதாயப்படி, சுருளிப்பட்டியில் உள்ள ஆர்த்தி மஹாலில் 28.10.2012 ல் திருமணம் நடந்தது

என்றும், திருமண வாழ்வின் பயனாக சாருநுஜா, ருத்துரஜா என்ற 2 பெண்குழந்தைகள் பிறந்தது என்றும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் தனது குழந்தைகளுடன் சந்தோஷமாக வாழ்ந்து வந்த நிலையில், எதிர்மனுதாரர் அவரது தாயாரின் தவறான துர்போதனைகளை கேட்டுக்கொண்டு மனுதாரர் மற்றும் மனுதாரரின் பெற்றோருக்கு எதிராக அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி எதிர்மனுதாரர் தன்னுடைய பிள்ளைகளை அழைத்துக்கொண்டு 23.10.2019 ம் தேதி முதல் தன்னிச்சையாகவும், ஏற்க இயலாத காரணங்களின் அடிப்படையிலும் மனுதாரரைவிட்டு பிரிந்து சின்னமனூரில் உள்ள அவரது தாயார் வீட்டிற்கு சென்று இருந்து வந்தார் என்றும், மேலும் கடந்த 04.12.2020 ம் தேதி எதிர்மனுதாரர் பொய்யான விவரங்களைக்கூறி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி விவாகரத்து பரிகாரம் கோரிய நிலையில், மனுதாரர் தன் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி, மேற்படி அறிக்கைக்கு பதிலறிவிப்பு அனுப்பாமல் எதிர்மனுதாரர் மற்றும் தனது குழந்தைகளை அழைத்து வந்து, மனுதாரர் வீட்டில் இல்வாழ்க்கை நடத்தி வந்தார் என்றும், மனுதாரர் மற்றும் மனுதாரரின் பெற்றோர்கள் எதிர்மனுதாரருக்கு உயிர் பயத்தை ஏற்படுத்துவதாகவும், எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழமுடியாது எனவும், அடிக்கடி தேவையற்ற வீண்பிரச்சனைகள் செய்தும், தற்கொலை செய்து கொள்ளப்போவதாக மிரட்டியும், மனுதாரர் மற்றும் மனுதாரரின் பெற்றோர்கள் வரதட்சணை கொடுமைகள் செய்வதாக புகார்கொடுத்து விடுவதாக மிரட்டி வந்துள்ளார் என்றும், அதன்பின் மீண்டும் எதிர்மனுதாரர் தனது பிள்ளைகளை அழைத்துக்கொணடு தன்னிச்சையாகவும், ஏற்க இயலாத காரணங்கள் இன்றியும், மனுதாரரைவிட்டு 05.08.2021 ம் தேதி பிரிந்து சென்று எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டில் இருந்து வருகிறார் என்றும், மேற்படி எதிர்மனுதாரரின் செயல்களால் மனுதாரர் மிகுந்த மன உளைச்சலுக்கும், மனவேதனைக்கும் ஆளாகியுள்ளார் என்றும், மேலும், மனுதாரர் தனது பிள்ளைகளை பார்க்க முயற்சித்தும், எதிர்மனுதாரர், மனுதாரின் பிள்ளைகளை பார்க்கவிடாமல் முறையின்றி தடுத்துவருவதுடன், அவ்வாறு மனுதாரர், தனது பிள்ளைகளை பார்க்க முயற்சிக்கும்பட்சம், மனுதாரர் மற்றும் மனுதாரின் பெற்றோர்களுக்கு எதிராக வரதட்சனை புகார் மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டப்படி குற்ற நடவடிக்கை எடுக்கப்போவதாக

25.07.2022ம்தேதி மிரட்டியுள்ளதால், எதிர்மனுதாரின் குற்றச் செயல்கள், எதிர்மனுதாரர், மனுதாருடன் நல்லபடியாக சேர்ந்து வாழ இயலாத நிலையை ஏற்படுத்தி வருவதாலும், மனுதாரர் மற்றும் மனுதாரின் குடும்பத்தினர்களுக்கு எதிராக தேவையற்ற குற்ற நிகழ்வுகள், அதன்மூலம் விளையும் தேவையற்ற பிரச்சனைகளை தவிர்க்க வேண்டியும், மனுதாருக்கு வேறு வழியில்லாத சூழ்நிலையில், மனுதாருக்கும், எதிர்மனுதாருக்கும் 28.10.2012ம்தேதி நடந்த திருமணத்தை ரத்து செய்து மனுதாரருக்கு விவாகரத்து வழங்கக்கோரி மனுதாரர் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இந்து சம்பிரதாயப்படி, சுருளிப்பட்டியில் உள்ள ஆர்த்தி மஹாலில் 28.10.2012ல் திருமணம் நடந்தது என்றும், திருமண வாழ்வின் பயனாக சாருநுஜா, ருத்துரஜா என்ற 2 பெண்குழந்தைகள் பிறந்தது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. எதிர்மனுதாரருக்கு திருமணத்தின்போது 100 பவுன் தங்கநகைகளும், ரூ.8 லட்சம் மதிப்புள்ள வீட்டு உபயோக சாமான்களும் கொடுத்ததாகவும், மனுதாரரின் தாய், தந்தை மற்றும் மனுதாரரின் சகோதரி மாலதி குணசேகரன் ஆகியோர்களின் துர்போதனையால் கடந்த 05.08.2021ம் தேதி எதிர்மனுதாரரையும், அவர் குழந்தைகளையும், மீண்டும் வரதட்சணை கேட்டு, கொடுமைப்படுத்தி வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டார்கள் என்றும், அன்றுமுதல் எதிர்மனுதாரரும், அவரது 2 குழந்தைகளும் எதிர்மனுதாரரின் தாயார் வீட்டில் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரரிடம் வரதட்சணையாக பெற்ற நகை 100 பவுன், பணம் ரூ8 லட்சம் மற்றும் வரதட்சணை பொருட்களை பலமுறை திரும்ப கேட்டும், அதை மனுதாரர் தராமல் மேற்படி நகை, பணத்தை தன் தாய் பூங்கொடி மற்றும் மாலதி, குணசேகரன் ஆகிய உறவினர்களுக்கு செலவுகள் செய்தும் மற்றும் மது பயன்படுத்தயும் வருவதால் எதிர்மனுதாரர், மனுதாரரை விட்டு பிரிய வேண்டிய நிலை எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது என்றும், மனுதாரர் மற்றும் அவரின் தாய் , உறவினர்கள் பூங்கொடி, மாலதி , குணசேகரன் ஆகியவர்கள் எதிர்மனுதாரர் மற்றும் அவரின் குழந்தைகளை கடுமையாக தாக்கியதால் எதிர்மனுதாரர் மற்றும் அவரின் குழந்தைகளின் உயிருக்கு

எந்த நேரமும், மனுதாரர் மற்றும் அவரின் உறவினர்களால் உயிருக்கு ஆபத்து உள்ளதால் உயிரின் பாதுகாப்பு கருதி மேற்படி மனுதாரரிடமிருந்து விவாகரத்து வழங்க வேண்டியும், வரதட்சணை விபரபட்டியலில் காட்டப்பட்ட 100 பவுன் தங்க நகை, ரொக்கம் ரூ.8 லட்சம் மற்றும் வீட்டு உபயோகப்பொருள்களை எதிர்மனுதாரருக்கு திருப்பிக்கொடுக்க வேண்டியும் இந்த எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**4. சாட்சியம் :**

இம்மனுவில் மனுதாரர் அருண் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் உறவினர் சந்தனபிரபு என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.22 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்,

**6. தீர்வு :**

கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், உபய மனுதாரர்களுக்கும் கடந்த 28.10.2012 ல் சுருளிப்பட்டியிலுள்ள ஆர்த்தி மஹாலில் வைத்து நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடைபெற்றது என்றும், திருமண வாழ்வின் பயனாக ஷருனுஜா, ருத்ரஜா என்ற 2 பெண்குழந்தைகள் பிறந்தார்கள் என்றும், திருமணமான நாளிலிருந்தே எதிர்மனுதாரர் அவரது பெற்றோர் பேச்சைக்கேட்டுக்கொண்டு மனுதாரரை உதாசீனப்படுத்தி கடந்த 23.10.2019 ம் தேதி முதல் மனுதாரரை விட்டு பிரிந்து குழந்தைகளுடன் சின்னமனூரிலுள்ள அவரது பெற்றோர் வீட்டில் வாழ்ந்து வருகிறார் என்றும், மனுதாரர் குடும்ப பெரியோர்கள் மூலம், நீதிமன்றம் மூலமும் சேர்ந்து வாழ பல முயற்சிகள் எடுத்தும், எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ வராமல், மனுதாரர் மீது சின்னமனூர் காவல்நிலையத்தில் பல பொய்யான புகார்களை கொடுத்து, மனுதாரரை உடலளவிலும், மனதளவிலும் கொடுமைப்படுத்தியுள்ளார் என்றும், மனுதாரர் சேர்ந்து வாழ தயாராக இருந்தும்,

எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ விருப்பமில்லாமல் இருப்பதால் மனுதாரர் கோரிய விவாகரத்து மனுவை அனுமதிக்க வேண்டுமென வாதிட்டார்.

**7.** இறுதியாக கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிர்மனுதாரர் தரப்பு இறுதியான வாதுரையின்போது பிரிவு–27 இந்து திருமணச்சட்டத்தின்படி 100 பவுன் நகை மற்றும் சீதனப்பொருட்களையும் திருப்பித்தர வேண்டுமென முன்னிறுத்தப்பட்ட வாதம் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும், ஏனெனில், இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர் எதிர்மனுதாரர் கடந்த 04.12.2020ம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் திருமணத்தின்போது அவருக்கு 50 பவுன் நகைகள் தான் போடப்பட்டது என்பதை அவரே ஒப்புக்கொண்டு ம.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டு, அந்த சங்கதிகளுக்கு எதிராக 100 பவுன் போடப்பட்டதாக சொல்வது ஏற்புடையதல்ல என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் 100 பவுன்நகை போட்டார்கள் என்பதையும், அவர் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.17 ஆவணத்தில் கண்ட பொருட்கள் மனுதாரர் வசம் தான் உள்ளது என்பதை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள்மூலம் நிரூபணம் செய்யாத நிலையில், எதிர்மனுதாரரின் வாதத்தை நிராகரித்தும், மனுதாரர் கோரியுள்ள விவாகரத்து பரிகாரத்தை அனுமதிக்க வேண்டுமென வாதிட்டார்.

**8.** இதற்கு மாறாக, எதிர்மனுதாரர் கற்றறிந்த வழக்கறிஞர் ஆவார். அவர் தனது தரப்பு வழக்கை நிரூபிக்க தானே நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராகி மேலும் அவரது வாதத்தில், மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் எதிர்மனுதாரருக்கும், அவரது குழந்தைகளுக்கும் உடலளவிலும், மனதளவிலும் தொடர் கொடுமைகளை செய்துள்ளார்கள் என்றும், ஆனால், மனுதாரர் எதிர்மனுதாரருடைய நகைகளை அடகுவைத்து அருண் மோட்டார் என்ற பெயரில் இருசக்கர வாகனங்களை வாங்கி விற்கும் தொழிலை பெரிய அளவில் வைத்து பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில்உள்ளார் என்றும், இருந்தாலும்கூட எதிர்மனுதாரருக்கோ, அவரது குழந்தைகளுக்கோ எவ்வித பராமரிப்பும் மனுதாரர் செய்யவில்லை என்றும், ஒவ்வொரு நாளும் மனுதாரருடன் வாழ்க்கை நடத்துவது என்பது எதிர்மனுதாரர், அவரது குழந்தைகளுக்கும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை உள்ள நிலையில் மனுதாரர் திருமணத்தின்போது எதிர்மனுதாரருக்கு போடப்பட்ட எ.ம.சா.ஆ.17

ஆவணத்தில் கண்ட 100 பவுன் மற்றும் சீர்பொருட்களையும் குழந்தைகளுக்கு உரிய ஜீவனாம்ச தொகையையும் கொடுக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறார் என்றும், எதிர்மனுதாரரின் நகை மற்றும் அவரது சீதனப்பொருட்களையும் அவருக்கு தனித்து பாத்தியப்பட்டது என்ற நிலையில், அதில் மனுதாரர் உரிமை கோர முடியாது என வாதிட்டு, தன் வாதத்திற்கு ஆதரவாக Pratibha Rani Vs. Suraj Kumar AIR 1985 SC-628, Rashmi Kumar Vs. Mahesh Kumar Bhada 1997 (2) SCC-397 ஆகிய முன் தீர்ப்புக்களை சுட்டிக்காட்டி பிரிவு-27 இந்து திருமணச்சட்டத்தின்படி மனுதாரரிடம் உள்ள 100 பவுன் நகை மற்றும் சீதனப்பொருட்களை இந்நீதிமன்றம் எதிர்மனுதாரருக்கு திரும்பக்கொடுக்க உத்திரவிட வேண்டுமென வாதிட்டார்.

**9.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுக்களில் இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட வழக்கு என்பது, உபய மனுதாரர்களுக்கும் இடையே கடந்த 28.10.2012 ம் தேதியன்று சுருளிப்பட்டியிலுள்ள ஆர்த்தி மஹாலில் வைத்து நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடைபெற்றது என்பதும், திருமண வாழ்வின் பயனாக ஷருனுஜா, ருத்ரஜா என்ற 2 பெண்குழந்தைகள் பிறந்தார்கள் என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இதை தவிர மனுதாரர் மனுவில் கூறியுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் இந்து திருமணச் சட்டம் பிரிவு 13 (1) (i-a) cruelty என்ற பிரிவின் கீழ் தாக்கல் செய்துள்ள விவாகரத்து பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பது குறித்து தீர்வு காண வழக்காவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**10.** இந்த விவாகரத்து மனுவை மனுதாரர் 'Cruelty' என்ற மேற்படி காரணத்தின் அடிப்படையில் விவாகரத்து கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அதற்குமாறாக, எதிர்மனுதாரர் தரப்பில் மனு 4 முதல் 7 பத்திகளில் கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை முற்றிலுமாக மறுத்து, மனுதாரர் எதிர்மனுதாரரின் நகைகளை திருப்பிக்கொடுக்கவில்லை என்றும், குழந்தைகளின் கல்வி மற்றும் பராமரிப்பு செலவுகளை செய்யவில்லை என குற்றச்சாட்டுக்களை சுமத்தி எதிர்வாதம் செய்துள்ளார்.

**11.** இதுகுறித்து மாண்புமிகு உச்சநீதிமன்றம் கீழ்க்கண்ட வரையறைகளின்கீழ் ஒரு செயல் தொடர்ந்து நடைபெற்றால் அது Cruelty என்ற பதத்தின்கீழ் வரும் என Hon'ble Supreme court in its judgment reported in **<u>Bankaj Mahajan vs. Dimple @ Kajal in 2011 (12) SCC page 1</u>** Hon'ble apex court held the following instances of cruelty are as follows :

(i) Giving repeated threats to commit suicide and even trying to commit suicide on one occasion by jumping from the terrace.
(ii) Pushing the appellant from the staircase resulting into fracture of his right forearm
(iii) Slapping the appellant and assaulting him
(iv) Misbehaving with the colleagues and relatives of the appellant causing humiliation and embarrassment to him.
(v) Not attending to household chores and not even making food for the appellant. Leaving him to fend for himself.
(vi) Not taking care of the baby
(vii) Insulting the parents of the appellant and misbehaving with them.
(viii) Forcing the appellant to live separately from his parents.
(ix) Causing nuisance to the landlord's family of the appellant, causing the said landlord to force the appellant to vacate the premises.
(x) Repeated fits of insanity, abnormal behavior causing great mental tension to the appellant.
(xi) Always quarreling with the appellant and abusing him.
(xii) Always behaving in an abnormal manner and doing weird acts causing great mental cruelty to the appellant என மேற்படி 12 காரணங்களில் ஏதாவதொரு காரணம் இருந்தால் மனக்கொடுமை Cruelty என்ற பதத்தின்கீழ் நீதிமன்றம் விவாகரத்து வழங்கலாம் என முன்தீர்வு பதிந்துள்ள நிலையில், இந்த வழக்கில் மனுதாரர் Cruelty என்ற காரணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதா? என்பது குறித்து தீர்வு காண வழக்காவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**12.** மனுதாரர் தன்னுடைய மனுவில் எதிர்மனுதாரர் அவரது தாயாரின் தவறான துர்போதனைகளை கேட்டுக்கொண்டு, தன் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு 23.10.2019 ம் முதல் சின்னமனூரிலுள்ள எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்று அங்கேயே வாழ்ந்து வருகிறார் என்றும், மனுதாரர் மற்றும் அவரது

பெற்றோருக்கு எதிராக பொய்யான புகார்களை கொடுத்தும், குழந்தைகளை அனுப்பாமலும், 04.12.2020ம் தேதி ஒரு பொய்யான வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், இதனால் மனுதாரர் மனவேதனை அடைந்துள்ளார் என்றும், எவ்வித காரணமும் இல்லாமல் மனுதாரர் மீதும், அவரது பெற்றோர்கள் மீதும் வரதட்சணை மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின்கீழ் புகார் கொடுக்கப்போவதாக கடந்த 25.07.2021ம் தேதிமுதல் மிரட்டி வந்து, இருவரும் சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தியதாகவும், எனவே, மனக்கொடுமை(Cruelty) என்ற பதத்தின்கீழ் தனக்கு விவாகரத்து வேண்டுமென இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்பட்டுள்ள நிலையில், மனு பிரச்சனைக்கு தீர்வு காண வழக்காவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**13.** மனுதாரர் தரப்பில் மனுதாரர் அருண் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆகவும், 2 குழந்தைகளின் பிறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.2 மற்றும் 3 ஆகவும், கடந்த 04.12.2020ம் தேதிய எதிர்மனுதாரர், மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.4 ஆகவும், ஆதார் அட்டைகள் ம.சா.ஆ.5 மற்றும் 7 ஆகவும், புகைப்படம் ம.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்து, தனக்கு மனக்கொடுமை(Cruelty) என்ற காரணத்தின் அடிப்படையில் விவாகரத்து வேண்டுமென இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மனுவில் உபயமனுதாரர்களுக்கிடையே உள்ள பிரச்சனை சம்பந்தமாக அவரது பெற்றோர்களுக்கு எதிர்மனுதாரர் செய்த பிரச்சனைகள் தெரியும் என கூறியுள்ள நிலையில், இவ்வழக்கில் மனுதாரரும், அவருடைய உறவினரான சந்தனபிரபு ஆகியோர்கள் மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

**14**. அதேபோல், எதிர்மனுதாரர் தரப்பில் அவருக்கு மனுதாரர் செய்த கொடுமைகள் அவரது தாயாருக்கு தெரியும் என்றும், காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், மாலதி, குணசேகரன் பிரச்சனை செய்ததாக எதிருரை தாக்கல் செய்து அதுசம்பந்தமாக எ.ம.சா.ஆ.1 முதல் 22 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள நிலையில், எதிர்மனுதாரரை தவிர அவர் தரப்பில் வேறு தனிப்பட்ட சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. எனவே, மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட

ம.சா.1, 2, எ.ம.சா.1 ஆகியோர்களின் வாய்மொழி சாட்சியங்களின் அடிப்படையிலும், இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின் அடிப்படையிலுமே இந்த மனு பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டியுள்ளது.

**15.** மனுவில் எதிர்மனுதாரர் அவரது தாயாரின் பேச்சைக்கேட்டுக்கொண்டு 23.10.2019 ம் தேதி முதல் அவரது பெற்றோர் வீட்டில் குழந்தைகளுடன் வாழ்ந்து வருவதாகவும், பொய்யான புகார்களை கொடுத்தும், மேலும் பல புகார்களை கொடுக்கப்போவதாக மிரட்டி வருவதாகவும், இனிமேலும் சேர்ந்து வாழ வழியில்லை என்றும், இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்து அதுசம்பந்தமாக சாட்சியமளித்துள்ளார். ஆனால், எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரை 7 மற்றும் 9 வது பத்திகளில், "05.08.2021 ம் தேதியில் மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார் வீட்டைவிட்டு வெளியேற்றிவிட்டதாகவும், மனுதாரர் குடும்பத்தாரால் எதிர்மனுதாரருக்கும், அவரது குழந்தைகளுக்கும் உயிருக்கு ஆபத்து உள்ளது என்றும், உயிரின் பாதுகாப்பு கருதி மேற்படி மனுதாரரிடமிருந்து விவாகரத்து வழங்க வேண்டுமென்றும், விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறார் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**16.** மேலும் இதுகுறித்து, மனுதாரரான ம.சா.1 ஐ எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது, "நான் என் அக்காவின் பேச்சைக்கேட்டுக்கொண்டு என் மனைவியை அடிக்கடி கொடுமைப்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. 05.08.2021 ம் தேதி முதல் என் மனைவி என்னை விட்டு பிரிந்து சென்றுவிட்டார். நான் கூடுதல் வரதட்சணை கேட்டு மனதளவில் கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. என் மனைவி 100 பவுன் நகையை திருப்பித்தந்தால் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறார் என்றால் சரியல்ல" என எதிர்மனுதாரர் கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை மறுத்து மனுதாரர் அருண் சாட்சியமளித்துள்ளார்.

**17.** மேலும், எதிர்மனுதாரரான எ.ம.சா.1 ஐ மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது , அவர் தனது சாட்சியத்தில், " நான் தாக்கல் செய்துள்ள எதிருரை 9 வது பத்தியில் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் உயிருக்கு பாதுகாப்பு இல்லாததால் நகை,

பொருட்களை கொடுத்துவிட்டு என் மகள்களுக்கு ஆயுட்கால ஜீவனாம்சம் கொடுத்தால் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறேன். நான் என் கணவருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளேனா என்றால் எனக்கும், என் குழந்தைகளுக்கும் உயிர் பயமாக உள்ளது. விருப்பமுமில்லை" என சாட்சியமளித்துள்ளார்.

**18.** ஆகையால், மேற்படி எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை 7 மற்றும் 9 வது பத்திகளில் உள்ள வாதுரைகள்(pleading) மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு ஒப்புக்கொள்ளப்பட்ட வாய்மொழி சாட்சியம் ஆகியவற்றை பரிசீலனை செய்யும்போது, எதிர்மனுதாரர் அவருக்கும், அவரது குழந்தைகளுக்கும் உயிருக்கு பாதுகாப்பு இல்லாததால், சேர்ந்து வாழ வழியில்லை என்றும், விவாகரத்து கொடுக்க தயாராக இருப்பதாக சாட்சியமளித்துள்ள நிலையில், இந்த மனுவில் பிரதானமாக தீர்வு காணவேண்டிய பிரச்சனை எதுவும் இல்லை என்பது தெரியவருகிறது.

**19.** மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ.8 முதலமைச்சரின் தனிப்பிரிவு புகார் நகல், எ.ம.சா.ஆ.9 16.09.2021ம் தேதியில் உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மனுதாரர் மீது கொடுத்துள்ள புகார்மனு ரசீது, 24.10.2025ம் தேதிய சின்னமனூர் காவல்நிலையத்தில் எதிர்மனுதாரர் கொடுத்த புகார்மனு ரசீது ஆகியவற்றை பரிசீலனை செய்யும்போது, உபயமனுதாரர்களுக்கிடையே 05.08.2021ம் தேதிக்குபின்னர் தொடர்பிரச்சனைகள் ஏற்பட்டு, அதற்காக எதிர்மனுதாரர் அவரது கணவர் மீது புகார் கொடுத்து காவல்நிலையத்தில் விசாரணைகள் நடைபெற்றுள்ள விவரம் தெரியவருகிறது. அதேபோல், இந்த வழக்கு விசாரணையின்போதும், பலமுறை சமரசம் பேசப்பட்டும் எதிர்மனுதாரர் தனக்கும், தனது குழந்தைகளின் உயிருக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையில் சேர்ந்து வாழ வழியில்லை எனக்கூறியுள்ளார்.

**20.** இந்நிலையில், இதுகுறித்து மாண்புமிகு உயர்நீதிமன்றம் Kalaivani Vs S.Durai 2023 (1) TNCJ 493 (Mad) Sec. 13(1)(i–a) – Divorce – Cruelty – Respondent/husband established that her brother father and other trespassed into his house and attempted to assault him. This ended otherwise disturbed matrimonial relationship till then it appears that both parties not thought of divorce though serious allegation levelled against them incident of attack caused prolonged psychological effect on respondent. Further parties living

separately since 2007 Respondent established cruelty. Hence court below rightly granted divorce petition" என்ற முன் தீர்ப்பில் வழங்கியுள்ள முன் தீர்வை பரிசீலனை செய்யும் போது, இந்த வழக்கிலும் எதிர்மனுதாரர் மனுதாரரை விட்டு பிரிந்து கடந்த 2021ம் ஆண்டுமுதல் பிரிந்து வாழ்ந்து வந்து, இனிமேலும் இருவரும் சேர்ந்து வாழக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பது தெரியவருகின்றது.

**21.** மேலும், இவ்வழக்கில் எதிர்மனுதாரர் கடந்த 2021ம் ஆண்டு முதல் தன் கணவரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருவதாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில், அவர்களுக்குள் ஒரு இணக்கமான சூழ்நிலை ஏற்படாமல், தொடர்ந்து பிரச்சனைகளும், காவல்நிலைய பஞ்சாயத்தும் நடந்துள்ள விபரம் தெரிய வருகிறது. .இந்நிலையில் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண இந்நீதிமன்றம், மாண்புமிகு உயர்நீதிமன்ற முன் தீர்ப்பை பார்வையிடும் போது, Civil Appeal No.6582/2008 Special Leave Petition (Civil) No.10907/2007 (Suman Kapur Vs. Sudhir Kapur) - In V.Bhagat V. D.Bhagat (Mrs.), (1994)1 SCC 337 and t*he Hon'ble High Court, Madras which reported in 2017 (8) MLJ Page 332 (R.Thangamani @ Mainavathy vs. S.Sathish kumar)* is relying upon wherein, our Hon'ble High court of Madras has held as follows : *"In the ultimate analysis, we hold that the respondent-wife has caused by her conduct mental cruelty to the appellant-husband and the marriage has irretrievably broken down. Dissolution of marriage will relive both sides of pain and anguish. In this court the respondent-wife expressed that she wants to go back to the appellant-husband, but, that is not possible now. The appellant-husband is not willing to take her back. Even if we refuse decree of divorce to the appellant-husband, there are hardly any chances of the respondent-wife leading a happy life with the appellant-husband because a lot of bitterness is created by the conduct of the respondent-wife."* என்ற முன் தீர்ப்பின்படி, எதிர்மனுதாரர் மனுதாரர் செய்த பிரச்சனைகள் காரணமாக கடந்த 05.08.2021ம் தேதி முதல் பிரிந்து தனியாக தனது 2 பெண்குழந்தைகளுடன் அவரது பெற்றோர் வீடான சின்னமனூரில் வாழ்ந்து வருவது தெரியவருகிறது. மேலே கண்ட சூழ்நிலையின்படி இனிமேல் ஒருவருக்கொருவர் இணக்கமான முறையில் சேர்ந்து வாழ்வதற்குரிய சூழ்நிலை இல்லை என்பதும், விவாகரத்து பரிகாரம் பிறப்பிப்பதுதான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**22.** மேலும், இந்த வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் திருமணத்தின்போது எதிர்மனுதாரருக்கு 100 பவுன் நகை மற்றும் சீர்பொருட்கள் கொடுத்ததாக எ.ம.சா.ஆ.17 வரதட்சணை பொருட்கள் பட்டியலை தாக்கல் செய்து அதில் கண்ட பொருட்களை மனுதாரர் எதிர்மனுதாரரிடம் ஒப்படைக்க வேண்டுமென Pratibha Rani Vs. Suraj Kumar AIR 1985 SC-628, Rashmi Kumar Vs. Mahesh Kumar Bhada 1997 (2) SCC-397 ஆகிய முன் தீர்ப்புக்களை சுட்டிக்காட்டி பிரிவு-27 இந்து திருமணச்சட்டத்தின்படி மனுதாரரிடம் உள்ள 100 பவுன் நகை மற்றும் சீதனப்பொருட்களை இந்நீதிமன்றம் எதிர்மனுதாரருக்கு திரும்பக்கொடுக்க உத்திரவிட வேண்டுமென வாதிட்டார். இதற்குமாறாக, மனுதாரர் தரப்பு சாட்சியத்தில், திருமணத்தின்போது, 30 பவுன் நகை மட்டுமே போட்டார்கள் என்றும், 100 பவுன் நகை போடவில்லை என்றும், கூடுதல் நகை கேட்டு தொந்தரவு செய்யவில்லை என சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில், எதிர்மனுதாரர் பிரிவு-27 இந்து திருமணச்சட்டப்படி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பது குறித்து தீர்வு காண வழக்காவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**23**. இவ்வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கடந்த 15.06.2026ம் தேதியில் DVC.No.50/2024ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு எ.ம.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் அந்த தகுதி வாய்ந்த நீதிமன்றம் பிரச்சனை-1ல் " எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரிடம் இருந்து பெற்ற வரதட்சணை நகை 100 பவுன், ரொக்கப்பணம் ரூ.8 லட்சம், சீர்வரிசை வீட்டு உபயோகப்பொருட்கள் சுமார் ரூ.10 லட்சம் கிடைக்கத்தக்கதா? என தனிப்பட்ட எழுவினா வனைந்து அதில் எதிர்மனுதாரர் ஏற்கனவே மனுதாரருக்கு அனுப்பிய ம.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பு 3 வது பத்தியை சுட்டிக்காட்டி, அவர் 50 பவுன்தான் திருமணத்தின்போது கொடுக்கப்பட்டது என ஏற்கனவே வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ளதை என்பதை பரிசீலனை செய்து, இந்த மனுதாரர் அருண் 50 பவுன் நகையையும், வீட்டு உபயோக சீர்வரிசைப் பொருட்களையும் எதிர்மனுதாரரிடம் ஒப்படைக்க வேண்டுமென உத்தரவு பிறப்பித்துள்ளது.

**24.** எனவே, ஏற்கனவே இந்த உபயமனுதாரர்களுக்கிடையே எழுந்த மணவாழ்க்கை சம்பந்தமான பிரச்சனையை, உத்தமபாளையம் நீதித்துறை நடுவர்

நீதிமன்றம் கடந்த 15.06.2026 ம் தேதியில் DVC.No.50/2024 ல் பிறப்பித்த உத்தரவில் 50 பவுன் நகை மட்டுமே திருமணத்தின்போது கொடுக்கப்பட்டதாக தீர்மானித்து, மேற்படி competent Judicial Magistrate Court உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், அது ஒரு conclusive proof என இந்திய சாட்சிய சட்டம் பிரிவு–41 வரையறுத்துள்ள நிலையில், மீண்டும் மேற்படி ம.சா.ஆ.22 நீதிமன்ற உத்தரவுக்கு முரண்பாடாக எதிர்மனுதாரர் பிரிவு–27 இந்து திருமணச்சட்டப்படி 100 பவுன் நகையையும், சீர்பொருட்களையும் திருப்பித்தர வேண்டுமென இந்த வழக்கில் பரிகாரம் கேட்டிருப்பது சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானித்து, இதுசம்பந்தமாக எதிர்மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட முன்தீர்ப்புக்கள் இந்த வழக்கின் பொருண்மைக்கு பொருந்தக்கூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**25.** எனவே, மேலே கண்ட காரணங்களினால் உபய மனுதாரர்கள் இனிமேலும் தினம் தினம் மன அமைதி மற்றும் மகிழ்ச்சியுடன் சேர்ந்து அமைதியான வாழ்க்கை வாழ இயலாது என்பது தெரிய வருகிறது. எனவே, இனி அவர்களின் வருங்கால அமைதியான வாழ்விற்கு அவர்களுக்குள் கடந்த 28.10.2012 ம் தேதியில் நடந்த திருமண பந்தத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**26.** அதேசமயம், Chandrika vs. M.Vijayakumar reported in 1996(1) Mad.L.W. page 695 (DB) held that the court may grant permanent maintenance to a party while disposing of the main petition even if no proper application has been moved என முன் தீர்ப்பு பகிர்ந்துள்ள நிலையில், நீதியின் நலன் மற்றும் உபய மனுதாரர்களின் மகள்கள் ஷருனுஜா, ருத்ரஜா ஆகியோர்கள் நல்லமுறையில் கல்வி பயின்று பல பரிசுகளை பெற்றுள்ள விவரம் எ.ம.சா.ஆ.6, எ.ம.சா.ஆ.7, எ.ம.சா.ஆ.21 ஆகிய புகைப்படங்களை பரிசீலனை செய்யும்போது தெரியவருகிறது. எனவே, மேற்படி உபய மனுதாரர்களின் 2 மகள்களின் எதிர்கால கல்வி மற்றும் அவரது வாழ்க்கை பராமரிப்பை கவனத்தில் கொண்டு, மனுதாரர் வைத்திருக்கும் அருண்மோட்டார்ஸ் இருசக்கர வாகனம் வாங்கி விற்பனை செய்யும் தொழில், விவசாய வருமானத்தை கருத்தில்கொண்டு, மனுதாரர் அவரது மகள்களின் வாழ்க்கை பராமரிப்பு தொகையாக 2 மகள்களுக்கும் தலா ரூ25,000/–ம் கொடுக்க வேண்டுமென உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கடந்த

15.06.2026ம் தேதியில் DVC.No.50/2024ல் உத்தரவு பிறப்பித்துள்ள விவரம் எ.ம.சா.ஆ.22 உத்தரவை பரிசீலனை செய்யும்போது தெரியவருகிறது.

**27.** எனவே, மனுதாரர் மேற்படி DVC.No.50/2024ல் அவரது 2 பெண்குழந்தைகளுக்கு மாதம் தலா ரூ.25,000/-ம் கொடுக்க வேண்டுமென உத்தரவு பிறப்பித்துள்ளபடி மொத்தம் ரூ.50,000/-ம் மாதம் தோறும் தொடர்ந்து கல்வி மற்றும் பராமரிப்பு செலவுக்காக அவரது குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும். அதனுடன் சேர்த்து பிரிவு-25 இந்து திருமண சட்டப்படி கூடுதலாக எதிர்மனுதாரருக்கு ரூ.5,000/-ம் மாதம், மாதம் கொடுக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. அதே தொகையை எதிர்மனுதாரருக்கும், அவரது மகள்களின் வாழ்க்கை பராமரிப்புக்கு மனுதாரர் தொடர்ந்து வழங்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

**28. முடிவாக,**

(i) மனுதாரர் இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(1)(i-a)ன் கீழ் விவாகரத்து கோரி தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 28.10.2012 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து (Divorce) வழங்கி உத்தரவிடப்படுகிறது.

(ii) இந்நீதிமன்றம் மனுதாரர், அவரது மகள்களான ஷருனுஜா, ருத்ரஜா ஆகியோருக்கு வாழ்க்கை பராமரிப்பு தொகையாக DVC.No.50/2024ல் பிறப்பித்த உத்தரவுப்படி ரூ50,000/-ஐ தொடர்ந்து கொடுத்து வரவேண்டுமென்றும், பிரிவு25 இந்து திருமணச்சட்டப்படி நிரந்தர பராமரிப்பு தொகையாக எதிர்மனுதாரருக்கு ரூ.5,000/-ஐ நேரடியாகவோ அல்லது அவரது வங்கி கணக்கிற்கு ஒவ்வொரு ஆங்கில மாதம் 6ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

(iii) செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 27.08.2026 நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M SHIVAJI CHELLIAH Digitally signed by M SHIVAJI CHELLIAH

**சார்பு நீதிபதி,**

**உத்தமபாளையம்.**

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :

ம.சா.1 ... அருண்
ம.சா.2 ... சந்தனபிரபு

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>

ம.சா.ஆ.1 ... 28.10.2012 ம் தேதியிட்ட திருமண அழைப்பிதழ் – அசல்

ம.சா.ஆ.2 ... 04.10.2013 ம் தேதியிட்ட ஷருனுஜா பிறப்பு சான்றிதழ் – நகல்

ம.சா.ஆ.3 ... 11.07.2019 ம் தேதியிட்ட ருத்ரஜா பிறப்பு சான்றிதழ் – நகல்

ம.சா.ஆ.4 ... 04.12.2020 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல்

ம.சா.ஆ.5 ... எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை – நகல்

ம.சா.ஆ.6 ... மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம்

ம.சா.ஆ.7 ... மனுதாரரின் ஆதார் அட்டை – நகல்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :</u>

எ.ம.சா.1 ... நீனா – எதிர்மனுதாரர்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | -- | எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை | ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ.2 | -- | திருமண புகைப்படம் | அசல் |
| எ.ம.சா.ஆ.3 | -- | திருமண புகைப்படம் | அசல் |
| எ.ம.சா.ஆ.4 | -- | முதல் குழந்தை புகைப்படம் | அசல் |
| எ.ம.சா.ஆ.5 | -- | 2 ம் குழந்தை புகைப்படம் | அசல் |
| எ.ம.சா.ஆ.6 | -- | முதல் குழந்தை பரிசு வாங்கிய புகைப்படம் | அசல் |
| எ.ம.சா.ஆ.7 | -- | 2 ம் குழந்தை பரிசு வாங்கிய புகைப்படம் | அசல் |
| எ.ம.சா.ஆ.8 | 18.08.2021 | CM Cell Complaint Copy | ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ.9 | 16.09.2021 | புகார்மனு ஏற்பு ரசீது எண்.134/2021 | ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ.10 | 24.10.2025 | புகார்மனு ஏற்பு ரசீது எண்.1306./2025 | ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ.11 | -- | மனுதாரர் தொழில் செய்யும் இடத்தைக் காட்டும் (அருண் மோட்டார் இருசக்கர வாகனம்) புகைப்படம் | அசல் |

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.12 | -- | மனுதாரர் தொழில் செய்யும் இடத்தைக் காட்டும் (அருண் மோட்டார் இருசக்கர வாகனம்) புகைப்படம் | அசல் |
| எ.ம.சா.ஆ.13 | -- | மனுதாரர் தொழில் செய்யும் இடத்தைக் காட்டும் (அருண் மோட்டார் இருசக்கர வாகனம்) புகைப்படம் | அசல் |
| எ.ம.சா.ஆ.14 | -- | மனுதாரர் தொழில் செய்யும் இடத்தைக் காட்டும் (அருண் மோட்டார் இருசக்கர வாகனம்) புகைப்படம் | அசல் |
| எ.ம.சா.ஆ.15 | 16.03.2021 | மனுதாரர் பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது | ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ.16 | 16.03.2021 | மனுதாரர் பெயரிலுள்ள குடிநீர் கட்டண வரி ரசீது | ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ.17 | -- | வரதட்சணை பொருட்கள் விவர பட்டியல் | நகல் |
| எ.ம.சா.ஆ.18 | -- | நகை அடகு ரசீது | கலர் நகல் |
| எ.ம.சா.ஆ.19 | -- | நகை அடகு ரசீது | கலர் நகல் |
| எ.ம.சா.ஆ.20 | -- | மனுதாரர் தொழில் அடையாள அட்டை புகைப்படம் | அசல் |
| எ.ம.சா.ஆ.21 | -- | முதல் குழந்தையின் கலைத்திருவிழா பாராட்டு புகைப்படம் | அசல் |
| எ.ம.சா.ஆ.22 | 15.06.2026 | உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் D.V.C.No.50/2024 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு | கணிணி நகல் |

M SHIVAJI CHELLIAH Digitally signed by M SHIVAJI CHELLIAH

**சார்பு நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

**Sub Court, UPM**
**O.P.No.23/2023**
**Fair Order**
**Dated.27.08.2026**

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 27 ம் நாள் வியாழக்கிழமை

**இந்து திருமண முதலேற்பு மனு எண். 23/2023**
*(CNR No.TNTH050001302023)*

உத்தமபாளையம் வட்டம், சுருளிப்பட்டி கிராமம், 504/வார்டு 3, நேருஜி காலனியில் வசித்து வரும் அய்யங்காளை அவர்கள் மகன், இந்து, சுமார் 36 வயதுள்ள அருண்

**.... மனுதாரர்**

**/எதிர்/**

உத்தமபாளையம் வட்டம், சின்னமனூர் டவுன், 33/10 ஏ, ராஜம்மாள் மணி இல்லம், வ.உ.சி.நகர், காளியம்மன் கோவில் தெருவில் வசித்து வரும் பாண்டியன் அவர்கள் மகள் இந்து, சுமார் 32 வயதுள்ள நீனூ

**.... எதிர்மனுதாரர்**

இம்மனுவானது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 28.10.2012 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, இந்து திருமணச் சட்டம் 13(1)(i–a) பிரிவுகளின் கீழ் விவாகரத்து பரிகாரம் வழங்கக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் : 19.01.2023

நீதிமன்ற முத்திரைக் கட்டணம் : ரூ.50/– செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 23.07.2026 ம் தேதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.பிரகாஷ், B.A.B.L., அவர்கள் ஆஜராகியும், ஆரம்பத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. Y.ரஹீம் ராஜா அவர்கள்

ஆஜராகியும், அதன்பின்னிட்டு எதிர்மனுதாரர் திருமதி.நினூ, வழக்கறிஞர் என்பதால் நீதிமன்றத்தில் ஆஜராகி (party in person) ஆக தனது வழக்கை தானே முன்னின்று நடத்தியும் இரு தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான:-

## நிறைவேற்றாணை

(i) மனுதாரர் இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(1)(i–a)ன் கீழ் விவாகரத்து கோரி தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 28.10.2012 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து (Divorce) வழங்கி உத்தரவிடப்படுகிறது.

(ii) இந்நீதிமன்றம் மனுதாரர், அவரது மகள்களான ஷருனுஜா, ருத்ரஜா ஆகியோருக்கு வாழ்க்கை பராமரிப்பு தொகையாக DVC.No.50/2024 ல் பிறப்பித்த உத்தரவுப்படி ரூ50,000/–ஐ தொடர்ந்து கொடுத்து வரவேண்டுமென்றும், பிரிவு–25 இந்து திருமணச்சட்டப்படி நிரந்தர பராமரிப்பு தொகையாக எதிர்மனுதாரருக்கு ரூ.5,000/–ஐ நேரடியாகவோ அல்லது அவரது வங்கி கணக்கிற்கு ஒவ்வொரு ஆங்கில மாதம் 6ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

(iii) செலவு தொகை இல்லை.

செலவு தொகை பட்டியல் : இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை.

2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 27ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH

**சார்பு நீதிபதி,**

**உத்தமபாளையம்.**